# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 10 இதழ் : 10 அக்டோபர் 2024 தனி பிரதி - ரூ. 20/- ஆண்டு சந்தா - ரூ. 200/-
VOl : 10 Issue No : 10 October 2024 Single Copy - 20/- Annual Subscription - Rs. 200/-



# உறுப்புகள் செயல் இழந்து படுத்த படுக்கையாக இருந்த மகன் ஜெபத்திற்கு பிறகு அற்புத சுகம் பெற்றான்!



2007-ம் ஆண்டு ஆலங்குளத்தில் நடைபெற்ற நற்செய்தி பெருவிழாவில் உறுப்புகள் செயலிழந்த நிலையில் சகோதரரிடம் ஜெபிக்கும் காட்சி

எனது இரண்டாவது மகன் பிறந்தபொழுது கை, கால்கள் மற்றும் உறுப்புகள் எதுவும் செயல்படவில்லை. குழந்தை பிழைக்குமா என்ற கேள்விக்குறி, அப்படி பிழைத்தாலும் படுத்த படுக்கை தான் என்ற நிலைமை. குழந்தையின் நிமித்தம் நாங்கள் கண்ணீர் வடித்தோம். எவ்வளவோ மருத்துவர்களை சந்தித்தும், சிகிச்சை அளித்தும் எந்தவொரு பயனுமில்லை. சிறப்பு குழந்தையை போல தூக்கி சுமக்க வேண்டிய நிலைதான் என்று கூறிவிட்டனர்.

இந்நிலையில் ஆலங்குளத்தில் நடைபெற்ற நற்செய்திப் பெருவிழாவில் குழந்தையை தூக்கிக் கொண்டு வந்தோம். அப்பொழுது மகனுக்கு நான்கு மாதம். அந்த மைதானம் முழுவதும் கூட்டம் நிரம்பி இருந்தது. **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஆரம்ப ஜெபம் செய்துவிட்டு தேவ செய்தி வழங்கினார்கள். செய்தி முடிவில் வந்திருந்த எல்லா மக்களுக்காகவும் ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஏராளமானவர்கள் தேவ வல்லமையினால் தொடப்பட்டார்கள். அசுத்த ஆவியின் பிடியில் சிக்கியிருந்த மக்கள் விடுதலையாவதை நான் நேரடியாக பார்த்தேன். எனக்கு தேவன் மேல் அதிக நம்பிக்கை ஏற்பட்டு எனது குழந்தையை தூக்கிக் கொண்டு வரிசையில் காத்திருந்து ஐயா அவர்களிடம் குழந்தையின் நிலையை சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டோம். ஐயா அவர்கள் ஜெபித்து "கலங்காதீர்கள்! உறுப்புகள் செயல்படாமல் படுத்த படுக்கையாக இருக்கும் உங்கள் குழந்தையின் உறுப்புகள் இனிமேல் செயல்பட ஆரம்பிக்கும். மற்ற குழந்தைகளை போல நடப்பான், பேசுவான்" என்று தீர்க்க தரிசனமாக கூறினார்கள். அவர்கள் சொன்னது போலவே மகனுடைய செயல்பாடுகளில் முன்னேற்றம் தெரிந்தது. மகன் நடக்க ஆரம்பித்தான், நன்றாக பேச ஆரம்பித்தான். இப்பொழுது மகன் நன்றாக இருக்கின்றான். இதை சாட்சியாக சொல்வதற்காக குற்றாலம் கூட்டத்திற்கு வந்திருக்கின்றோம். இப்பொழுது மகனுக்கு 17 வயதாகிறது. இன்றளவும் மகன் நன்றாக நடக்கிறான், பேசுகின்றான். சக மாணவர்களை போல இருக்கின்றான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!



அந்த சிறுவன் முழு சுகம் பெற்று ஆரோக்கியத்துடன் சாட்சி சொல்லும் வேளை

*- திருமதி. ஜான்சி மைக்கேல், பாவூர்சத்திரம்.*

dranandastira@mojindia.org

# அன்பரின் ஊழியம்

♦ மலர் : 10 ♦ அக்டோபர் 2024 ♦ இதழ் 10

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உங்களை இந்த பத்திரிக்கையின் வாயிலாக சந்திப்பதில் மிகுந்த சந்தோஷம். வருடத்தின் முடிவிற்குள் வந்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் செய்கிற எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்களை தொடரும்படியாக ஜெபிக்கிறேன்.

**தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான், கர்த்தர் அவனோடே கூட இருந்தார்.** 1சாமு.18:14

**இதோ, பெத்லெகேமியனாகிய ஈசாயின் குமாரரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன், அவன் வாசிப்பதில் தேறினவன், அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன்,காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன், கர்த்தர் அவனோடேகூட இருக்கிறார் என்றான்.** 1சாமு.16:18 இந்த காலங்கள் கொடூரமான காலங்களாக இருந்தாலும் நம் வாழ்க்கையில் கர்த்தர் நம்மோடுகூட இருந்தால் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் நமக்காக அவர் எல்லா காரியங்களையும் செய்து முடிப்பார். தாவீதோடு கர்த்தர் இருந்தார். **தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான், சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார்.** 2சாமு.5:10. ஆகவே அவன் உயர்த்தப்பட்டான், ஆசீர்வதிக்கப்பட்டான், சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி ஜெயம் பெற்றான். அவன் வாழ்நாள் முழுவதும் சென்ற இடமெல்லாம் தேவன் ஒத்தாசை செய்தார். **தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.** 2சாமு.8:14

அன்பரின் ஊழிய பத்திரிக்கை சந்தாவை இதுவரை புதுப்பிக்காதவர்கள் விரைவில் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். புதுப்பிக்கிறவர்களுக்கு மட்டுமே இனிவரும் மாதங்களில் பத்திரிக்கை அனுப்பி வைக்கப்படும்.

செப்டம்பர் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களிலும் கர்த்தர் பெரிய காரியங்களை செய்தார். விசேஷமாக குற்றாலத்தில் நடைபெற்ற கூட்டத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். அந்தப் பகுதியில் 15 வருடங்களுக்கு பிறகு தற்பொழுது தான் கூட்டம் நடைபெற்றது. 15 வருடத்திற்கு முன் நடைபெற்ற கூட்டத்தில் கர்த்தர் செய்த அற்புத செயல்களை சொல்லி கர்த்தரை துதித்தது மிகுந்த சந்தோஷத்தை தந்தது.

இதேப்போல அநேக இடங்களில் மக்கள் தாங்களாகவே முன்வந்து கூட்டங்களை நடத்தும் பொழுது ஏராளமான ஆத்துமாக்கள் சந்திக்கப்படுவார்கள். அவ்வாறு சந்திக்கப்படுகிற ஆத்துமாக்களை கர்த்தர் உங்கள் கணக்கில் எடுத்துக்கொள்வார். குறிப்பாக உங்கள் கிராமங்களில் கூட்டம் நடத்த விரும்புகிறவர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா**

**சந்தா விபரம்**

இந்தியா : ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: +91 9488845627
Telugu : +91 99445 36343, Malayalam: +91 94889 32937

e-mail:info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி : அன்பரின் ஊழியம், 40, S.P.K தெரு, உறையூர் திருச்சி – 620 003.
Address : Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003

அக்டோபர் மாதம் சென்னை, நாகர்கோவில், நாசரேத் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் பகுதியில் நடைபெறுகிற கூட்டங்களுக்கு தவறாமல் வந்து பங்குபெறுங்கள். இக்கூட்டங்களை நடத்துவதற்குரிய தேவைகள் அதிகமாயிருக்கிறது. அதற்காக ஜெபியுங்கள். உங்கள் குடும்பத்தின் சார்பாக கூட்டங்களை நடத்துவதற்கு முன்வாருங்கள். உங்களுக்குரிய பலன் பரலோகத்தில் மிகுதியாக உண்டு.

**நமது Ministry of Jesus YouTube சேனலில் வெளிவருகிற அனுதின அற்புதம், அற்புதத்தின் மாலை மற்றும் தேவ செய்திகளை தவறாமல் பாருங்கள். நம்பிக்கை டி.வி. சேனல் வாயிலாக வெளிவருகிற அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகளை பாருங்கள்.**

**எங்கள் அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகத்திற்காகவும், கர்த்தரே அவர்களுக்கு பெலனாக இருந்து ஒவ்வொரு நாளும் பெலப்படுத்தவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.**

ஊழியத்திலும் திருச்சபை பணிகளிலும் கர்த்தர் எங்களை வல்லமையாக பயன்படுத்தவும், எங்களுடைய நல்ல சுகத்திற்காகவும், மகனுடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.


கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**

jane@mojindia.org


## இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்

**ஏசாயா 43:1; சங்கீதம் 32:8; லூக்கா 1:37; 2தீமோத்தேயு 4:18**



# தீங்கு மேற்கொள்ளாது



***தேவ செய்தி : ஜோனத்தன் மோசஸ்ராஜ் ஸ்தீரா***

கிறிஸ்துவுக்குள் பிரியமான பங்காளர்களுக்கு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**நான் உன்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து, உன்னைப் பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்.** எரேமியா 15:21

இந்த மாதத்தில் ஆண்டவர் உங்களுக்கு தருகிற இந்த வாக்குத்தத்தம் மிகவும் அருமை யானதாக இருக்கிறது. பொல்லாதவர்களின் கைக்கும், பலவந்தரின் கைக்கும் தப்புவித்து விடுவிப்பேன் என ஆண்டவர் கூறுகிறார். இந்த பொல்லாதவர்கள் யார்? பலவந்தர்கள் யார்? நம்முடைய எதிரிகளும், நம்மை எதிர்ப்பவர்களுமே அந்த பட்டியலில் அடங்குவார்கள். இன்றைக்கு சாதாரணமாக உங்கள் குடும்பத்தில் அல்லது உங்கள் வேலை ஸ்தலத்தில் இத்தகைய நபர்களை நீங்கள் சந்திக்க நேரிடலாம்.

உதாரணமாக, வாகனத்தில் நன்றாக பயணம் செய்துக்கொண்டே இருப்போம். திடீரென ஒரு வாகனம் உங்கள் வாகனத்திற்கு முன் வந்து இடையூறு தரலாம், சண்டை போடலாம். நீங்கள் தவறாக வந்ததாக சொல்லி பிரச்சனை பண்ணலாம். கலங்காதீர்கள். கர்த்தர் உங்களோடு இருக்கிறார். இவ்வாறு எதிர்பாராத நேரத்தில் வருகிற எதிரிகளின் கைக்கு உங்களை தப்புவிப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

சில நேரங்களில் தேவையில்லாத பிரச்சனைகள் அல்லது காரியங்கள் உங்கள் வாழ்வில் வந்தால் நீங்கள் கலங்க வேண்டாம். கர்த்தர் அதன்மூலம் உங்களை உயர்த்த விரும்புகிறார்.

**அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.** சங். 91:15

ஆபத்தில் உங்களை தப்புவிக்கிறவர் மாத்திரமல்ல, கனப்படுத்துகிறவராயும் நம் ஆண்டவர் இருக்கிறார்.

"ஆண்டவர் அந்த ஆபத்திற்கு என்னை விலக்கி பாதுகாக்கலாம் அல்லவா? எதற்காக அந்த ஆபத்தின் ஊடே செல்ல அனுமதிக் கிறார்" என்ற கேள்வி உங்கள் மனதில் எழுவது இயல்பானதே. ஆண்டவர் உங்கள் வாழ்வில் அந்த காரியங்களை அல்லது அந்த சூழ்நிலையை அனுமதிப்பது உங்களை மேன்மைப்படுத்து வதற்காகத்தான் என்பதை மறந்துவிடாதீர்கள். இந்த அனுபவங்களின் ஊடாக சென்ற ஒரு சில முக்கியமான நபர்களை வேதத்திலிருந்து நான் உங்களுக்கு விளக்கி காட்ட விரும்புகிறேன். கவனமாய் படியுங்கள்.

## யோசேப்பு

**நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள், தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப் பண்ணினார்.** ஆதி. 50:20

யோசேப்பின் வாழ்வில் நடந்த அத்தனை காரியங்களையும் நீங்கள் அறிவீர்கள். தந்தையின்

அரவணைப்பில் செல்லப்பிள்ளையாக வளர்ந்த வன், சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டு குழியில் போடப்பட்டான், அதன்பின் அடிமையாக விற்கப்பட்டு, போத்திபாரின் வீட்டில் அடிமைக்குரிய வேலைகளை செவ்வையாக செய்தான், பாவத்திற்கு விலகி ஓடினான். அதன்நிமித்தம் பொய் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் பல ஆண்டுகள் வாழ்ந்தான். கர்த்தர் அவன் பொறுமையை பார்த்தார், அவனை நினைவுகூர்ந்தார், அவனுக்கு வந்த தீங்கை முற்றிலும் மாற்றிப் போட்டார். சிறையிலிருந்த அவனை தூக்கி எடுத்து சிங்காசனத்திற்கு உயர்த்தி கனப்படுத்தினார். பிரபுக்களோடு உட்கார வைத்தார். ஆம். கர்த்தர் உயர்த்த நினைக்கும் பொழுது அதை தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. கர்த்தர் ஒருவரை கனப்படுத்தும் பொழுது அது நம் கண்களுக்கு ஆச்சரியமாகவே தோன்றும்.

## சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ

**"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.** (தானி.3:17)

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபது முழ உயரமும் ஆறு முழ அகலமுமான ஒரு பொற் சிலையை செய்து நிறுத்தினான். சகல ஜனங்களும் ஜாதிகளும் பாஷைக்காரர்களும் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ள வேண்டும். எவனாகிலும் தாழ விழுந்து, அதைப் பணிந்து கொள்ளவில்லையென்றால் அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவான் என்ற கடுமையான உத்தரவு போடப் பட்டிருந்தது. ஆதலால் சகல ஜனத்தாரும் ஜாதியாரும் பாஷைக்காரரும் தாழவிழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொண்டார்கள்.

அச்சமயத்தில் கல்தேயரில் சிலர் ராஜா விடம் வந்து, "சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் யூதரான மனுஷர் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும், நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளாமலும் இருக்கிறார்கள்" என்ற வழக்கை வைக்கிறார்கள். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ மூவரும் ராஜா நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளாமல் இருந்தது உண்மைதான் என விசாரித்து, மீண்டும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பை ராஜா கொடுக்கிறான். அவன் நிறுத்தின சிலையைப் பணிந்து கொள்ளும்படி வற்புறுத்துகிறான். இல்லையென்றால் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள்; உங்களை என் கைக்குத் தப்புவிக்கப்போகிற தேவன் யார் என்று சவால் விடுகிறான்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி: **"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வது மில்லை"** (தானி.3:17-18) என்று உறுதியாக கூறினார்கள். அதனால் கோபமடைந்த ராஜா உடனே ஏழு மடங்கு சூடாக்கப்பட்ட எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே அவர்களை போடுகிறான். ஆனால் ஆண்டவர் அந்த சூளையின் நடுவில் இறங்கி அந்த நெருப்பின் தன்மையை ஒன்றுமில்லாதபடி செய்து அம்மூவரையும் காப்பாற்றினார். ஒரு ராஜாவின் கைக்கு தப்புவிப்பது எளிதான காரியமாக

இருக்கலாம். ஆனால் எரிகிற நெருப்பு சூளையிலிருந்து காப்பாற்ற கர்த்தரால் மட்டுமே முடியும்.

## தானியேல்

**...தானியேலின் காரியம் ஜெயமா யிருந்தது.** தானி.6:28

தானியேல் கர்த்தருக்கு பயந்து வாழ்ந்த நல்ல ஒரு உயர்ந்த மனிதர். இவர் வாழ்வில் நடந்த அத்தனை அனுபவங்களும் உங்களுக்கு நன்றாக தெரியும். சிங்கக்குகையிலிருந்த இவரை கர்த்தர் காப்பாற்றினார். சிங்கககுகைக்கு செல்வதற்கு முன்பாகவே கர்த்தர் அவரை பகைவரின் சூழ்ச்சியிலிருந்து தப்புவித்து இருக்கலாம் அல்லவா என யோசிக்கலாம். சில நேரங்களில் ஆண்டவர் நம் வாழ்வில் செய்கிற காரியங்கள் நமக்கு சிரிப்பாக வரும்.

ஒருவேளை சிங்கக்குகைக்கு செல்லாமல் கர்த்தர் அவரை காப்பாற்றியிருந்தால் இன்றைக்கு நாம் என்ன சொல்வோம். அவர் ஒரு நீதிமான் அவரை கர்த்தர் தப்புவித்தார் என்பதோடு முடித்துக்கொள்வோம். ஆனால் சிங்கங்களின் பற்களுக்கு இரையாகாதபடி கர்த்தர் தப்புவித்து அவனை கனப்படுத்தினார். அதனால் பல ஆண்டுகள் கடந்தும் அவரைக் குறித்து நாம் பேசுகிறோம். சிங்கத்தின் வாய்க்கு கர்த்தர் தப்புவித்ததால் தான் தானியேலின் தேவன் ஒருவரே தேவன் என்ற பெரியதொரு அறிவிப்பை ராஜா செய்கிறார்.

## லாசரு

பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான். அவனுக்கு மரியாள், மார்த்தாள் என்னும் இரு சகோதரிகள் இருந்தனர். லாசரு வியாதியாயிருந்தப் பொழுது அவனுடைய சகோதரிகள், இயேசு வினிடத்திற்கு, ஆளனுப்பி, ஆண்டவரே, "நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்" என்ற செய்தியை சொல்லி அனுப்பினார்கள். அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்ட பொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார். (யோவான் 11:6) இயேசு அவன் வியாதியாயிருந்தப்பொழுதே சென்றிருந்தால், லாசரு சாதாரணமாக சுகம் பெற்று இருந்திருப்பான், லாசருவை யாருக்கும் தெரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. இயேசுவோ லாசருவின் மரணத்தை குறித்தும், தாம் அவனை உயிர்ப்பிக்க போவதையும் முன்பே அறிந்திருந்ததால் அவர் காலம் தாழ்த்தினார். **இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்.** யோவான் 11:4 லாசரு இறந்து நான்கு நாட்கள் ஆன பிறகே இயேசு அங்கு வந்தார். அதாவது கல்லறைக்குள் இருந்தவனை ஒரு வார்த்தையினால், மரண கட்டிலிருந்து விடுவித்து, மீண்டும் உயிர் கொடுத்து கனப்படுத்தினார். **அத்துடன் இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாச முள்ளவர்களானார்கள்.** யோவான் 11:45.

உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சில சூழ்நிலைகள்கூட உங்களை கல்லறை வரைக்கும் கொண்டு போனாலும் கர்த்தருக்கு நன்றி சொல்லுங்கள். "என் வாழ்க்கையே கல்லறை போல ஆகிவிட்டது, எல்லாமே முடிந்துவிட்டது இனி ஒன்றும் இல்லை" என நினைத்துக் கொண்டு இருக்கிறீர்களா? சோர்ந்து போகாதீர்கள், இயேசு கிறிஸ்து தாமே உங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டி எழுப்புவார் உங்கள் சூழ்நிலையை முற்றிலும் மாற்றி

அதிசயத்தை செய்வார். உங்கள் சத்துருக்கள் முன்பாக உங்களுக்கு என ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துவார், உங்கள் தலையை உயர்த்துவார். **என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. சங்.23:5**

## யோவான்

கிறிஸ்துவுக்காக அதிக உபத்திரவப்பட்டவர்களில் அப்போஸ்தலனாகிய யோவானும் ஒருவர் ஆவார். அப்போஸ்தலர்கள் பன்னிரண்டு பேரில் இவர் முக்கியமான நபராக கருதப்படுகிறார். நன்கு படித்தவர், ஞானமுள்ளவர், இயேசுவிற்கு அன்பான சீடராகவும் இருந்தார். இவர் பவுலைப் போல அதிக பயணங்கள் செய்யவில்லை. ஆனால் பல கடிதங்கள் வாயிலாக விசுவாசிகளுடன் தொடர்புக்கொண்டு அவர்களை விசுவாசத்தில் பெலப்படுத்தி வந்தார். இவர் எழுதிய கடிதங்களில் சில கடிதங்கள் மட்டும் அதிக முக்கியத்துவம் பெற்று வேதத்தில் இடம்பெற்று இருக்கிறது.

ரோமப்பேரரசு இவரை பல சித்ரவதைகளுக்கு உள்ளாக்கியது. இவரை தூக்கி கொதிக்கிற எண்ணெயில் போட்டார்கள். இவருக்கு ஒன்றும் ஆகவில்லை. கொடூரமான தண்டனைகளைத் தந்தார்கள். அப்பொழுதும் இவர் உறுதியாக இருந்தார். இறுதியில் இவரை நாடு கடத்தினார்கள்.

ரோம பேரரசின் ஆளுகையில் பல தீவுகள் இருந்தது. அவ்வாறு பத்மு தீவில் உள்ள மிகவும் குறுகிய இருட்டான ஒரு அறைக்குள் இவரைத் தள்ளி அடைத்து வைத்தார்கள். ஒரு சில நாட்களில் இவர் மூச்சுவிட சிரமப்பட்டு இறந்துவிடுவார் என எண்ணினார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பின்பு நடைபெறப்போவதை முன்கூட்டியே அந்த தீவில் வைத்து அவருக்கு இயேசு காண்பித்தார். யோவானை கொல்ல நினைத்த ரோம பேரரசு வெட்கம் அடைந்தது. நாம் கர்த்தருக்கு உண்மையாக இருந்தால் அவர் நமக்கு செய்யும் காரியங்களும் பயங்கரமாயிருக்கும். கர்த்தர் உங்கள் எதிரிகளின் கைகளுக்கு உங்களை தப்புவித்து கனப்படுத்துவார். உங்கள் எதிரிகள் வெட்கப்பட்டு போவார்கள்.

ஆம். பிரியமானவர்களே, யோசேப்பிற்கு வந்த தீங்கை கர்த்தர் மாற்றி அவனை உயர்த்தி கனப்படுத்தினார். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ கர்த்தருக்காக வைராக்கியமாக இருந்தப்பொழுது, எரிகிற நெருப்புசூளையிலிருந்து அவர்களை தப்புவித்தார். கர்த்தருக்கு பயந்து வாழ்ந்த தானியேலை சிங்கத்தின் வாய்க்கு தப்புவித்து, குகையிலிருந்து விடுவித்தார். இறந்து நான்கு நாட்கள் ஆன லாசருவை இயேசு உயிரோடு எழுப்பினார். அப்போஸ்தலர் யோவானை ரோமப்பேரரசின் கொடுமைக்கு தப்புவித்தார்.

இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற அன்பு தேவ பிள்ளைகளே, கர்த்தர் உங்களையும் தீங்கிற்கு தப்புவித்து காப்பாற்றுவார். உங்களுக்கு என விசேஷித்த பந்தியை ஆயத்தப்படுத்தி உங்களை உயர்த்தி கனப்படுத்துவார். நீங்கள் இறுதிவரை உங்கள் விசுவாசத்தை காத்துக்கொள்ளுங்கள். கர்த்தரை உறுதியாக பற்றிக்கொள்ளுங்கள். நீங்கள் கர்த்தருடைய சொந்த ஜனம், அவருடைய இரத்தத்தால் கழுவி மீட்கப்பட்டவர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார், உங்களுக்காக வழக்காடுவார், உங்களுக்கு ஜெயத்தை தருவார்.

உங்கள் பாவங்களை நீக்கி உங்களை சுத்திகரிக்க கல்வாரி சிலுவையில் இயேசு தம் சொந்த இரத்தத்தை சிந்தினார். அவருடைய தழும்புகளால் நீங்கள் சுகமுடன் வாழ்வீர்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

# 2024 அக்டோபர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 அவன் எனக்குத் தீங்கு செய்ய தேவன் அவனுக்கு இடங்கொடுக்கவில்லை. (ஆதி.31:7)

02 ... உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக்காத்தருளும். (1நாளாகமம் 4:10)

03 சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். (சங்.41:1)

04 நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்குசெய்யாமலும் இருங்கள் என்றார். (சங்.105:15)

05 கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக்காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். (சங்.121:7)

06 என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; (ஏசா.11:9)

07 தீங்குவராததற்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை. (ஏசா.57:1)

08 என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லை யென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசா.65:25)

09 தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன். (எரே.15:11)

10 தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். (சங்.46:1)

11 நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை.... (அப்போஸ்.18:10)

12 அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர். (சங்.71:20)

13 கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார். (2தீமோ. 4:18)

14 .... நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். (யோவான் 17:15)

15 இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். (சங்.37:39)

16 கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். (நாகூம் 1:7)

17 ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். (சங்.91:15)

18 என் தேவனாகிய கர்த்தர் எங்கும் எனக்கு இளைப்பாறுதலைத் தந்தார். விரோதியும் இல்லை, இடையூறும் இல்லை. (1இராஜா 5:4)

19 என் சிறுவயது தொடங்கி அநேகந்தரம் என்னை நெருக்கியும், என்னை மேற்கொள்ளாமற் போனார்கள். (சங்.129:2)

20 எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். (லூக். 11:4)

21 தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார். (சங்.107:6)

22 தீங்கு நாளில் நீரே என் அடைக்கலம். (எரே.17:17)

23 என் ஆபத்து நாளிலே எனக்கு எதிரிட்டு வந்தார்கள்; கர்த்தரோ எனக்கு ஆதரவாயிருந்தார். (2சாமு.22:19)

24 இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். (சங்.34:6)

25 கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார், ஆகையால் என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள். (எரே.20:11)

26 நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர். (சங்.138:7)

27 ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. (லூக்கா 10:19)

28 எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார். (2தீமோ.3:11)

29 உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். (ஏசா.54:17)

30 இனித் தீங்கைக் காணாதிருப்பாய். (செப்பனியா 3:15)

31 கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார். (2தெச.3:3)



செப்டம்பர் மாதம்

# குற்றாலத்தில் நடைபெற்ற கூட்டம்

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ ஜனமே.


15 வருடங்களுக்கு பிறகு குற்றாலத்தில் சுகமளிக்கும் விடுதலைக்கூட்டத்தை நடத்துவதற்கு கர்த்தர் ஒத்தாசை செய்தார். இந்த கூட்டத்திற்கு நானும், என் மகள் Dr. ஜேன் ஜாஷ்வா அவர்களும் கலந்துக்கொண்டு தேவ செய்தியை அளித்தோம். கூட்டம் முடிந்து இறுதியில் பங்காளர்களை தனித்தனியே சந்தித்து அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கி பாரத்துடன் ஜெபித்தோம்.

அன்பரின் ஊழியத்தின் தலையாய பணி இயேசுவின் அன்பையும், மனதுருக்கத்தை வெளிப்படுத்துவதே. அந்த நாளில் அநேக பாடுகள் மற்றும் கஷ்டங்களின் ஊடே வந்த மக்களின் கண்ணீரை கர்த்தர் துடைத்தார். சமாதானத்துடன் அவர்கள் திரும்பிச்சென்றனர்.

ஊழியத்தில் என்னோடு இணைந்து தாங்கி வருகிற உங்களுக்கும் இந்த ஆத்தும அறுவடை பணியில் மிகுந்த பங்குண்டு என்பதை கூறிக்கொள்கிறேன். இன்னும் பல கிராமங்களில் இத்தகைய கூட்டங்களை நடத்த விரும்புகிறோம். கூட்டங்களை நடத்த விரும்புகிறவர்கள், கூட்டத்திற்கு ஸ்பான்சர் செய்ய விரும்புகிறவர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.
பெயர் வெளியிட விரும்பாத நம் பங்காளர் ஒருவர் செப்டம்பர் மாதம் விருதுநகரில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஸ்பான்சர் செய்தார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.














## தீர்க்கதரிசனம் நிறைவேறியது!



30 வருடத்திற்கு முன்பு வள்ளியூரில் உள்ள பாஸ்கர் திருமண மண்டபத்தில் நடை பெற்ற கூட்டத்திற்கு நாங்கள் அனைவரும் குடும்பமாக வந்து கலந்துக் கொண்டோம். கூட்டம் முடிந்து தனிஜெப வேளையில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் தீர்க்கதரிசனமாக இரண்டு காரியங்களை குறித்து கூறினார்கள். **"நீங்கள் வீடு கட்டுவீர்கள், கணவருக்கு வரவேண்டிய சம்பளம் கிடைக்கும்"** என சொன்னார்கள். ஐயா சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே நாங்கள் வீடு கட்டி முடித்துவிட்டோம். என் கணவருக்கும் சம்பளம் சரியாக கிடைத்தது. நாங்கள் கர்த்தருக்குள் ஆசீர்வாதமாக இருக்கிறோம். தேவனுக்கே மகிமை!

**– திருமதி. எலிசபெத், வடலிவிளை.**

## தேர்வில் வெற்றி



நான் B.Sc.Nursing முடித்துள்ளேன். துபாய் நாட்டிற்கு வேலைக்கு செல்வதற்காக இரண்டு முறை தேர்வு எழுதினேன். இரண்டு முறையும் தேர்வில் தோல்வி அடைந்தேன். நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். 3-வது முறையாக தேர்வுக்கு செல்ல ஆயத்தமானப்பொழுது மீண்டும் ஐயா அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பி ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். Question எல்லாம் மிகவும் கடினமாகவே இருந்தது. ஆனால் கர்த்தர் இந்த முறை எனக்கு இரங்கினார். தேர்வில் வெற்றி பெற உதவி செய்தார். அதற்காக கர்த்தரை துதிக்கிறேன். ஐயா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**– திருமதி. மர்லின் நலிஷா, பரக்குன்னு.**

## மனஅழுத்தம் நீங்கியது!

என் அக்காவின் பேரன் 10-ம் வகுப்பு தேர்வில் இரண்டு பாடங்களில் மதிப்பெண் குறைவாக எடுத்திருந்தான். அதற்காக டியூஷன் வைத்தப்பொழுதும் அவன் படிப்பில் முன்னேற்றம் இல்லை. அத்துடன் அவர்கள் வீட்டில் ஏற்பட்ட பிரச்சனை நிமித்தம் மனஅழுத்தத்தில் இருந்தான்.



நான் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத் திற்கு நேரில் வந்து **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களை நேரில் சந்தித்து அக்காவின் பேரனுக்காக ஜெபிக் கும்படி சொன்னேன். ஐயா அவனுக்காக பாரத்துடன் ஜெபித்துவிட்டு நல்ல மதிப்பெண் களுடன் வெற்றி பெறுவான் என தீர்க்கதரிசன மாக சொன்னார்கள். அதன்பிறகு பேரன் மனதில் சமாதானம் காணப்பட்டது. கடந்த ஆண்டு தேர்வு முடிவில் நாங்கள் எதிர்பார்த்த தைவிட பேரன் அதிக மதிப்பெண்களுடன் வெற்றி பெற கர்த்தர் இரங்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**– திருமதி. ஜாய்ஸ் ரஞ்சிதம், சென்னை.**

## சத்துருவின் போராட்டத்திலிருந்து விடுதலை!



என் மகள், மருமகன் இருவரும் கத்தார் நாட்டில் வேலை பார்த்துக் கொண்டி ருக்கிறார்கள். மருமகன் கடந்த ஜனவரி மாதம் முதல் சத்துருவின் போராட்டத்தினால் அதிக கஷ்டங்களை அனுபவித்தார்கள். வார்த்தையினால் சொல்ல முடியாத அளவு கடுமையான போராட்டம் இருந்தது.

கடந்த வருடம் ஜூன் மாதம் திருநெல்வேலி யில் நடைபெற்ற தனி ஜெபத்திற்கு நானும் என் கணவரும் வந்திருந்தோம். என் மருமகனுடைய நிலையை **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் சொன்னோம். ஐயா என் மகளிடம் பேசி ஜெபித்து விட்டு உடனடியாக அந்த வீட்டை காலிசெய்து வேறு வீட்டிற்கு போகும்படி சொன்னார்கள். ஐயா சொன்ன ஆலோசனைபடி மகள், மருமகனும் செயல்பட்டார்கள். தற்பொழுது அவர்கள் நல்ல சுகத்துடன் எந்த பிரச்சனையும் இல்லாமல் சமாதானமாய் அந்த இடத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். விடுதலையாக்கிய கர்த்தரை மனதார துதிக்கிறேன். என் மருமகனுக் காக பாரத்துடன் ஜெபித்த ஐயாவிற்கு எங்களுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன்.

**– திருமதி. கமலாபாய், பாளையங்கோட்டை**

## நல்ல விளைச்சல் கிடைத்தது!



நான் வயலில் மக்காச் சோளம் போட்டிருந் தேன். நன்றாக வளர்ந்து வந்தது. திடீரென செடியில் நோய் தாக்கம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் அன்பரின் ஊழியத்திற்கு தொலை பேசி வாயிலாக தொடர்புக்கொண்டு விவசாயத்திற்காக ஜெபிக்கும் படி சொன்னேன். ஊழியர்கள் பாரத்துடன்

ஜெபித்தார்கள். ஜெபத்திற்கு பிறகு செடியில் எற்பட்டிருந்த நோய் தாக்கம் முற்றிலும் நீங்கி கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது. எந்த சேதமும் இல்லாமல் கர்த்தர் நல்ல விளைச்சலை தந்து ஆசீர்வதித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**– திரு. பழனிவேல் முத்துச்சாமி, சேலம்.**

## திருமணம் நடைபெற்றது!



நான் அன்பரின் ஊழிய பங்காளர். எங்கள் வாழ்வில் கர்த்தர் ஏராளமான நன்மைகளை செய்துள்ளார். என்னுடைய அரசு வேலையிலும் கர்த்தர் அற்புதமாக நடத்தி வருகிறார். குடும்பத்தில் சமாதானம் மற்றும் சந்தோஷத்தை நிறைவாக தந்துள்ளார்.

எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள். கடந்த வருடம் அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு குடும்பமாக வந்து கலந்துக்கொண்டோம். எங்கள் மகளுக்கு திருமணம் நடைபெற ஜெபிக்கும்படி ஜெப விண்ணப்பத்தில் எழுதிக்கொடுத்து சென்றோம். கர்த்தர் எங்கள் மகளுக்கு ஏற்ற துணையைக் கொடுத்தார். தேவ கிருபையால் மகளுடைய திருமணம் சிறப்பாக நடைபெற்றது. ஒரு பேரனும் இருக்கிறான். கர்த்தருக்கு கோடா கோடி நன்றி களையும், ஸ்தோத்திரங்களையும் செலுத்துகிறோம்.

**– பெருமாள், தஞ்சாவூர்.**

## கேன்சர் நோய் நீங்கியது!



என் பெயர் சாந்தி. 2019–ம் ஆண்டில் என் உடல் முழுவதும் கேன்சர் நோய் பரவி வயிறு வீங்கி, பயங்கரமான வலி, வேதனையுடன் கஷ்டப்பட்டேன். அந்த நேரத்தில் தஞ்சாவூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு மிகுந்த மனபாரத்துடன் நான் வந்து கலந்துக்கொண்டேன்.

ஜெப நேரத்தில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்து எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே அவர்கள் ஜெபத்தைக் கேட்டு எனக்கு பரிபூரண சுகத்தை தந்தார். ஜெபித்த அந்த நிமிடமே வயிறு வீக்கம் அப்படியே வடிந்து விட்டது. வலி, வேதனை முற்றிலும் நீங்கியது. அன்று முதல் இன்று வரை என்னை ஜீவனோடு அற்புதமாக பாதுகாத்து வருகிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். எனக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பிய ஐயா அவர்களுக்கு என்னுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன்.

**– சாந்தி, பூதலூர்.**


**பங்காளர்களின் கவனத்திற்கு**

அன்பரின் ஊழிய பத்திரிக்கையின் ஆண்டு சந்தா தொகையை இதுவரை புதுப்பிக்காத பங்காளர்கள் விரைவில் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

ஆண்டு சந்தா ரூ. 200/-

ஆயுள் சந்தா ரூ. 2000/-

## மகன் வாழ்க்கையில் கர்த்தர் இடைபட்டார்! இப்பொழுது மகன் நல்ல நிலையில் இருக்கிறான்!



எனது மகன் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் எப்பொழுதும் சோர்வுடன் காணப்பட்டான். நாங்கள் பல்வேறு மருத்துவர்களை சந்தித்து சிகிச்சைகள் மேற்கொண்டும் மகனிடம் எந்தவித முன்னேற்றமும் இல்லை. இந்நிலையில் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஆலங்குளம் இசக்கி மஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் கண்ணீரோடு கலந்து கொண்டேன். அக்கூட்டத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனது மகனுக்காக ஜெபித்து "கலங்காதீர்கள்! உங்கள் மகன் மத்தியில் கர்த்தர் ஒரு மாற்றத்தை கட்டளையிடுவார். மகன் எல்லாரையும் போல செயல்படுவான்" என்றார்கள். அவர்கள் சொன்ன வார்த்தையின் படியே மகன் நன்றாக படிக்க ஆரம்பித்தான். இப்பொழுது நல்ல வேலைக்கும் சென்று கொண்டிருக்கிறான். அதுமட்டுமல்ல, நான்கு எலும்புகள் உடைந்து அறுவை சிகிச்சை செய்து மிகுந்த வேதனையில் நான் இருந்தேன். அதிலிருந்தும் கர்த்தர் எனக்கு பரிபூரண சுகத்தை கொடுத்தார். எங்கள் பகுதியில் நான் ஒரு ஜெப வீராங்கனையாக இருக்க தேவன் கிருபை செய்துள்ளார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**– திருமதி. ஜெயராணி, ஆலங்குளம்**

## என் நெருக்கங்களை கூறி இரட்டிப்பான வரங்களால் நிரப்பின வல்லமையின் தேவன்!



எனது ஊழியப் பாதையில் பல நெருக்கங்களை சந்தித்தேன். நான் ஊழியம் செய்யாதபடிக்கு பலர் பிரச்சனை செய்தனர். என்னை கொலை செய்வதற்கும் முயற்சிகள் செய்தனர். இதனால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளானேன். இந்நிலையில் மனபாரத்தோடு குற்றாலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்து நான் கடந்து வந்த பாதைகளை வெளிப்படுத்தினார். மேலும், **"கலங்காதே! இரட்டிப்பான வரங்களால் உன்னை நிரப்பி ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்துவேன்"** என தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். இதை கேட்டதும் கர்த்தர் என்னை நினைத்திருக்கிறார், ஆசீர்வதித்திருக் கிறார் என்பதால் மிகுந்த உற்சாகம் அடைந்தேன். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

**– பாஸ்டர் அருள்தாஸ், தென்காசி**

## பில்லிசூன்ய கட்டிலிருந்து விடுதலை! குடி பழக்கம் மாறியது!

39 வருடங்களுக்கு முன்பு நான் பல பில்லி சூன்ய கட்டினால் அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். அந்த நேரத்தில் சீயோன்புரத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்து கலந்துக் கொண்டேன். கூட்ட முடிவில் எனக்காகவும், என் கணவருக்காகவும் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஊக்கமாய் ஜெபித்தார்கள். அந்த பில்லி சூன்ய கட்டிலிருந்து இயேசு என்னை விடுதலை யாக்கினார். என் கணவரும் குடிபழக்கத்திலிருந்து முழுவதுமாக விடுதலையானார்கள். அதன்பின் சொந்தவீடு கட்டினோம். எங்களுடைய 5 பிள்ளைகளுக்கும் திருமணம் முடிந்தது. அவர்கள் அனைவருமே பெரிய பெரிய சொந்த வீட்டில் இருக்கிறார்கள். எங்களை இவ்வளவு ஆசீர்வாதமாய் வைத்திருக்கிற கர்த்தரை மனதார துதிக்கிறேன். எங்களுக்காக ஜெபித்த ஐயா அவர்களுக்கும் எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

**– பெயர் வெளியிட விரும்பாதவர்**

**Tamil Whats App No.**
**+ 91 95004 87059**

## வங்கிக் கணக்குகளின் விபரம்

DR. ANANDA STIRA
A/C NO. 10848469699

ANBARIN OOZHIYAM
A/C NO. 10848559426

MINISTRY OF JESUS
A/C NO. 10848474869



**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள்.
(10.00 AM - 6.00 PM)



# தேவன் மேல் நம்பிக்கை

தேவ செய்தி : திருமதி. மார்கிரேட் ஸ்திரா

எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே! பத்திரிக்கை வாசகர்களே! உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு இச்செய்தியை உங்களுக்கு கொடுப்பதில் அதிக மகிழ்ச்சியடைகின்றேன். கர்த்தருடைய ஆவியானவர் உங்களோடு பேசுவாராக!

**கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்**

**– நீதி. 28 : 25**

வேதத்தில் அநேக வார்த்தைகள் நம்மை திடப்படுத்துவதாக இருக்கும். உதாரணத்திற்கு, பரிசுத்த வேதாகமத்தில் அநேக இடங்களில் பயப்படாதே! திகையாதே! கலங்காதே! பலங்கொண்டு திடமனதாயிரு! அழாதே! இப்படிப்பட்ட வார்த்தைகளை வாசிக்கும்பொழுது தேவனே நம்மை தேற்றுவது போல இருக்கும். அவர் நம்மோடு பேசுவது போல இருக்கும். ஆவிக்குரிய அனுபவம் உள்ளவர்களுக்கு இது நன்கு தெரியும். அதுபோன்ற வார்த்தைகளில் ஒன்று தான் **நம்பிக்கை** இந்த வார்த்தையை தான் நாம் மேலே உள்ள வசனத்தில் வாசிக்கின்றோம்.

பிரியமானவர்களே! நம்பிக்கை என்று சொல்லும்பொழுது, நம்மில் அநேகர் மனிதர்களை நம்புவார்கள். மனிதர்களை நம்பும்பொழுது அது நடக்கலாம், நடக்காமலும் போகலாம். நாம் மலை போல் ஒரு மனிதனுடைய வார்த்தையை கேட்டு நம்பி இருப்போம். ஆனால் அந்த மனிதன் நல்லவராகவே இருந்தாலும், சந்தர்ப்ப சூழ்நிலைகள், நமக்கு வாக்குப்பண்ணினதை அவரால் நிறைவேற்ற முடியாமல் போய்விடும். அப்பொழுது நாம் மிகுந்த ஏமாற்றமடைகின்றோம். பக்தன் தாவீது சங்கீதம் 39:7–ல் நீரே என் நம்பிக்கை என்றும், சங்கீதம் 71:5–ல் நீரே என் நோக்கமும், என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர் என அறிக்கை செய்கின்றான். எவ்வளவு ஆழமான நம்பிக்கை பாருங்கள். சிறுவயது முதல் தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கிறான். அந்த நம்பிக்கையே அவனை உன்னதமான இடத்திற்கு கொண்டு சென்றது. நீங்கள் இதுபோன்ற நம்பிக்கையை தேவன் மேல் வைக்கிறீர்களா? அப்படி இல்லை என்றால் இனிமேலாவது **“தேவனே நீர் தான் எல்லாம், நீர் தான் என் நம்பிக்கை”** என்ற நிலைக்கு வந்துவிடுங்கள். அந்த நிலைக்கு வந்துவிட்டீர்கள் என்றால் நீங்கள் நிச்சயமாக தாவீதை போல உயர்த்தப்படுவீர்கள்.

## எசேக்கியா ராஜாவின் நம்பிக்கை

அதுமாத்திரமல்ல, வேதத்திலே இன்னொரு ஆச்சரியமான சம்பவத்தை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். ஆகாஸ் என்னும்

யூதாவுடைய ராஜாவின் குமாரனாகிய எசேக்கியா என்னும் ராஜா எருசலேமில் 29 ஆண்டுகள் அரசாண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ராஜா தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்துள்ளான். இவனை குறித்து 2 இராஜாக்கள் 18:5,7–ம் வசனத்தில் "இவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை, ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார், அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று" என்று எழுதப்பட்டுள்ளது. சற்று ஆழமாக யோசித்து பாருங்கள். எத்தனையோ ராஜாக்கள் அரசாண்டார்கள். ஆனால் இவனைப் போல கர்த்தர் மேல் இந்த அளவு யாரும் நம்பிக்கை வைக்கவில்லை. அதனால் கர்த்தர் அவனோடிருந்தார்! ஆம்! கர்த்தர் நம்மோடு இருப்பார் என்றால், நமக்கு வேறு எதுவுமே தேவையில்லை. ஏனெனில் பரலோகங்களை உண்டாக்கின, அண்ட சராசரங்களை உருவாக்கின தேவன் அற்ப மனிதர்களாகிய நம்மோடு இருப்பதே பெரும் பாக்கியம் தானே! இதை மிகத்தெளிவாக புரிந்துகொண்ட ஒரு ராஜா, அது எசேக்கியா ராஜா தான். இந்த ராஜாவை குறித்து வாசிக்கும்பொழுது நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். அவனுக்கு கீழ் எத்தனையோ சேவகர்கள் இருந்திருப்பார்கள். அவன் ஆணையிட்டால் யாரை வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அந்த அளவிற்கு அதிகாரம் படைத்தவன். அவன் கை நீட்டினால் அத்தனை படைகளும் வந்து நிற்கும். அப்படிப்பட்ட அதிகாரமுள்ள ஒரு ராஜா தன் அதிகாரத்தின் மீது நம்பிக்கை வைக்காமல், தன் கூடவே இருக்கும் ராணுவத்தின் மீது நம்பிக்கை வைக்காமல் சர்வ வல்லமையுள்ள தேவனை நம்புகிறான்.

## உங்கள் நம்பிக்கை யார் மீது?

ஆம் பிரியமானவர்களே! நாமும் கூட நம்முடைய அன்றாட வாழ்க்கையில் யாரை நம்புகின்றோம். அன்றாடம் பலதரப்பட்ட மனிதர்களை நாம் பார்க்கிறோம். ஒரு காரியம் நமக்கு நடக்க வேண்டும் என்றால் சிலரை நம்பித்தான் ஆக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு காரியம் நமக்கு கைகூடி வரவேண்டுமானாலும் மனிதர்களை நம்புவதைப் பார்க்கிலும், முதலாவது தேவனிடத்தில் இதை தெரிவித்து, அவர் இதை சரியாக செய்து முடிப்பார் என்று தேவனை முதலாவது நம்ப வேண்டும். அந்த நம்பிக்கை முழுமையான ஒன்றாக இருக்க வேண்டும். இன்றைக்கு எத்தனையோ குடும்பங்கள் தேவன் மீது நம்பிக்கை வைக்காமல், தங்கள் அவநம்பிக்கையினால், இன்னும் சொல்லப்போனால் மூட நம்பிக்கையினால் குடும்பங்கள் சீரழிந்து கொண்டிருக்கிறது. செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சி செய்திகளிலும் பார்த்தால் நம்பிக்கை இல்லாத காரணத்தினால் பல நாடுகள் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு பல உயிர்கள் பலியாகிக்கொண்டிருக்கிறது. காரணம் அவர்கள் தேவன் மீது நம்பிக்கை வைக்காமல் தங்கள் ஞானத்தின் மேல், தங்களிடம் பல நவீன ராணுவ தளவாடங்கள் இருக்கிறது, நம்மை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது என்று

தங்களை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இது எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது பாருங்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ராஜா தேவனை நம்பி எப்படி அமைதியான சூழலில் நாட்டு மக்களை நடத்தினான், இப்பொழுது தங்களை நம்பி ஒவ்வொரு நாளும் என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ, மரணம் இன்றோ நாளையோ என மக்கள் பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காரணம் வேறு ஒன்றுமில்லை. பிரியமானவர்களே! தங்களை நம்பிக்கொண்டு இருப்பதுதான் இதற்கு காரணம். உங்கள் நம்பிக்கை யார் மீது உள்ளது? உங்கள் மீதா, அல்லது உங்களை உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள தேவன் மீதா? யோசித்துப் பாருங்கள்!

- **கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**
- **அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத்தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்**

**– எரேமியா 17: 7,8**

தேவன் மேல் நம்பிக்கை வைத்து நீங்கள் வாழும்பொழுது நதியோரத்தில் தன் வேர்களை விட்டு, வெப்பம் வருவதை காணாமல் தப்பாமல் கனிகொடுக்கிற ஒரு மரத்தைப்போல ஆசீர்வதிக்கப் படுவீர்கள். நீங்கள் கனி கொடுக்கிறவர்களாக, அநேகருக்கு பிரயோஜனமுள்ளவர்களாக மாற்றப்படுவீர்கள்.

என் வாழ்க்கையே இதற்கு ஒரு உதாரணம், நான் சர்வ வல்லதேவனை முழுமையாக நம்பினேன், ஒவ்வொரு நாளும் அவர் மீது வைக்கும் நம்பிக்கையில் பெருகினேன். எந்த ஒரு காரியமாக இருந்தாலும், அது சிறியதாக இருந்தாலும், பெரியதாக இருந்தாலும் முதலாவது தேவனிடம் ஒப்புக்கொடுத்து நம்பிக்கை வைப்பேன். அவர் என்னை கைவிடவே இல்லை. எசேக்கியா ராஜாவோடு தேவன் இருப்பார் என்றால், நம்மோடு ஏன் இருக்க மாட்டார்? என்று என்னை நானே அடிக்கடி கேள்வி கேட்டுக்கொள்வேன்.

ஆம் பிரியமானவர்களே! அவர் என்னோடு இருப்பதை, என்னோடு பேசுவதை நான் நன்றாக உணர்ந்திருக்கின்றேன். எசேக்கியா ராஜாவோடு, தாவீதோடு இருந்த தேவன் நிச்சயமாக உங்களோடும் இருப்பார். உங்களை வழி நடத்துவார். ஒன்றை தெரிந்துகொள்ளுங்கள். பிரியமானவர்களே! "யாக்கோபின் தேவனை தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்" (சங்கீதம் 146:5) நீங்கள் தேவன் மேல் நம்பிக்கை வைத்தாலே பாக்கியவதிதான், பாக்கியவான்தான். எவ்வளவு ஆச்சரியம் பாருங்கள். என் அன்பு சகோதர, சகோதரிகளே! கலங்காதீர்கள்! பயப்படாதீர்கள்! கர்த்தர் உங்களோடு இருப்பார்! உங்கள் நம்பிக்கை வீண் போகாது. கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொரு வரையும் ஆசீர்வதித்து காப்பாராக!

**Malayalam Whats App No.**
**+ 91 94889 32937**

# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)







உதவி பெற்ற பிள்ளைகளில் ஒரு பகுதியினர்...





இயேசு அவர்கள் இருதயத்தின் யோசனையை அறிந்து,
ஒரு சிறுபிள்ளையை எடுத்து,அதைத் தமதருகே நிறுத்தி,
அவர்களை நோக்கி: இந்தச் சிறுபிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்ளுகிறவன்
என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்;என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன்
என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்...
(லூக்கா 9:47-48)

# அன்பே பிரதானம்

*சாதி மத இன வேறுபாடின்றி சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட அனாதை பிள்ளைகளுக்கு உங்கள் சார்பில் உங்கள் சகோதரன் செய்யும் அன்பின் அர்ப்பணிப்புகள்!*

கடந்த செப்டம்பர் மாதம் சேலம் மாவட்டம் அக்ரஹாரம், மேட்டுப்பட்டி, அயோத்தியாபட்டணம், ஆத்தூர், வெள்ளாள குண்டம், சேஷன்சாவடி, காரிப்பட்டி ஆகிய பகுதியில் உள்ள நமது S.J.Saves Trust டியூஷன் சென்டரில் படிக்கிற 203 ஏழை எளிய மாணவ, மாணவிகளை சந்திக்க Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் வந்திருந்தார்கள்.


203 பிள்ளைகளுக்கு பரிசு பொருட்கள் மற்றும் இலவசமாக குடை, போர்வை, தட்டு, டம்ளர், டிபன்பாக்ஸ், நோட்புக், மருந்து வகைகள் (Cough syrup, Vitamin Tonic) ஊட்டச்சத்து பவுடர், மற்றும் இனிப்பு காரம் வகைகளை வழங்கினார்கள். அத்துடன் அவர்களுக்கு மதிய உணவாக சிக்கன் பிரியாணியும் தரப்பட்டது. பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டார்கள்.


மகேஷ்வரி என்ற தாய் 26 வயதில் கணவனை இழந்து 3 பிள்ளைகளுடன் சிறு குடிசையில் வாழ்ந்து வருகிறார்கள். மண் தரையில் பழுதடைந்த நிலையில் உள்ள மேற்கூரைகள் இருந்தன. பள்ளியில் தருகிற சத்துணவு மற்றும் நம் டியூஷன் சென்டரில் இரவு தருகிற உணவும் தான் அவர்கள் வாழ்க்கையின் ஆதாரமாக இருந்து வருகிறது. பள்ளி சீருடைகள் மட்டும்தான் அவர்களுடைய உடையாக இருக்கிறது. எல்லா நேரமும் அந்த உடையை போட்டிருப்பதால் ஆங்காங்கே கிழிந்த

நிலையில் உள்ளது. சரியான கழிவறை வசதிகள் கிடையாது.




இராமலிங்கம் என்பவரின் மகன் கடன் பிரச்சனை காரணமாக தற்கொலை செய்துக்கொண்டார். அவருடைய மருமகள் பிள்ளைகளை விட்டுவிட்டு வேறு திருமணம் செய்துக்கொண்டு போய்விட்டார். அனாதையாக்கப்பட்ட 3 பிள்ளைகளும் தாத்தா பாட்டி கவனிப்பில் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். அந்த குடிசையின் மேற்கூரை தென்னை மர ஓலையால் வேயப்பட்டிருந்தது. அதுவும் பழுதடைந்து சரியான சுவர்கள் இல்லாத காரணத்தினால் அடிக்கடி பாம்புகள். பூரான் மற்றும் பல விடி பூச்சிகள் வீட்டிற்குள் வந்துவிடுகின்றது. பள்ளியில் தருகிற சத்துணவு மட்டுமே இவர்களுடைய அன்றாட உணவாக இருக்கிறது. அவர்கள் நிலையை அறிந்த ஐயா உடனே அவர்கள் சாப்பாட்டிற்கு தேவையான அரிசி. மளிகை சாமான்கள் வாங்குவதற்கு உதவி செய்தார்கள்.







பிள்ளைகளுடைய வீட்டின் நிலையை ஐயா நேரில் அறிந்து வந்தார்கள்.பிள்ளைகள் தாங்கள் விரும்புகிற பொருட்களை வாங்கிக் கொள்ளும்படி ஒவ்வொருவருக்கும் கையில் சிறிய தொகை கொடுத்து வந்தார்கள். ஐயாவின் வருகையினால் பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள்.










ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய

Bank A/c. Name : S J SAVES TRUST
Account No. 019150310875369
Bank Name : Tamilnadu Mercantile Bank
Branch : Palakarai, Trichy
IFSC Code : TMBL 0000019
A/c Type : Current

மருத்துவமனை பணிகளுக்கு உதவி செய்ய

Bank A/c. Name : S J SAVES TRUST
Account No. 36477148891
Bank Name : State Bank of India
Branch : Cantonment, Trichy Main Brach
IFSC Code : SBIN 0000930
A/c Type : Current

# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

**இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார், உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின் சென்றார்கள். மத்.20:34**

இயேசுகிறிஸ்துவின் குணமாக்கும் பணியில் S.J.S.T. கிராமப்புற மருத்துவமனை முனைந்து செயலாற்றி வருவதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். அன்பு பங்காளர்களாகிய உங்களுடைய நல் ஒத்துழைப்பிற்காகவும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். இந்தப் பணிக்காக ஜெபியுங்கள். உற்சாகமாய் தாங்குங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

மருத்துவமனைக்கு வருகிற மக்களில் பெரும்பாலானோர் கூலி வேலைக்கு செல்பவர்கள், கட்டிட தொழிலாளர்கள், நூறு நாள் வேலைக்கு செல்பவர்கள் மற்றும் கடை நிலை வேலை செய்பவர்கள் ஆவர். நகர்ப்புற மருத்துவமனைகளில் உள்ள அனைத்து தரமான சிகிச்சைகளும் நம் மருத்துவமனையில் தரப்படுகிறது. தினந்தோறும் இருபது முதல் நாற்பது நோயாளிகள் வரை வருகை தந்து குறைந்த செலவில் நல்ல சிகிச்சைகளை பெற்று செல்கின்றார்கள். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு இலவசமாகவும் சிகிச்சைத் தரப்படுகிறது.

**பெண் மருத்துவர் Dr.ஏஞ்சல் அவர்கள் மருத்துவமனையின் பொறுப்பாளராக இருந்து செயல்படுகிறார்கள். அத்துடன் இரண்டு M.D., மூன்று M.B.B.S., மருத்துவர்களும் உற்சாகமாய் பணியாற்றுகிறார்கள்.**

**இன்னும் பல நவீன வசதிகள் கொண்ட கட்டமைப்புகளுடன் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இந்த தேவைகள் சந்திக்கப்பட ஊக்கமாய் ஜெபியுங்கள். தாங்குங்கள்.**





# உலக செய்திகள்



பூமிக்கு இந்த வருடத்தில் தற்காலிகமாக மற்றொரு நிலவு கிடைக்கப்போகிறது என்ற தகவலை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். கடந்த ஆகஸ்ட் 7-ம் தேதி கண்டு பிடிக்கப்பட்ட 10 மீட்டர்கள் (33 அடி) உள்ள சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கு Asteroid 2024 PT5 என்று பெயரிடப்பட்டது. இந்த சிறுகோள் ஆனது 2024 செப்டம்பர் 29 முதல் 2024 நவம்பர் 25 வரை பூமிக்கு சிறு நிலவாக [mini-moon] செயல்பட உள்ளது. இந்த குறுகிய கால கட்டத்திற்கு மட்டும் பூமியின் புவி ஈர்ப்பு விசையினால் ஈர்க்கப்பட்டு இந்த சிறுகோள் பூமியை சுற்றும். ஆனால், ஒருமுறை முழு சுற்றை நிறைவு செய்யும் முன்னரே அதாவது நவம்பர் 25-க்கு பின்னர் பூமியின் புவி ஈர்ப்பு விசையில் இருந்து விடுபட்டு சூரியனை சுற்ற துவங்கும். மிகவும் சிறிய அளவில் உள்ளதால் பூமியை சுற்றும் காலகட்டத்தில் இதை வெறும் கண்களால் பார்ப்பது சிரமம். ஆனால் இந்த காலகட்டத்தில் பூமிக்கும் பூமிக்கு அருகில் இருக்கும் பொருட்களுமான உறவை ஆய்வு செய்து புரிந்துகொள்ள உதவும் என்றும் புவிஈர்ப்பு அழுத்தங்கள் மற்றும் விசையினால் பூமிக்கு வெளியில் உள்ளவை எவ்வாறா கரியாக்ட் செய்கிறது என்பதை அறிந்து கொள்ளவும் இந்த நிகழ்வு உதவும் என அமெரிக்கன் ஆஸ்ட்ரோனாமிகள் சொசைட்டி விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். முன்னதாக கடந்த 2022-ம் ஆண்டு NX1 என்ற சிறு நிலவு பூமியைச் சுற்றியது குறிப்பிடத்தக்கது



அமெரிக்க வாழ் இந்திய விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கியுள்ளார். கடந்த ஜூன் 5-ம் தேதி தனியார் நிறுவனமான போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலம் மூலம் விண்வெளி சென்றார். 8 நாட்களில் பூமிக்கு திரும்புவதாக இருந்தது. ஸ்டார்லைனரில் ஏற்பட்ட தொழில்நுட்ப குறைபாடு காரணமாக திரும்ப முடியாமல் போனது. இதனால் அடுத்த வருடம் பிப்ரவரி மாதம் பூமிக்கு திரும்ப உள்ளார். இந்த நிலையில் விண்வெளி நிலையத்தில் இருந்து வீடியோ மூலம் பத்திரிக்கை யாளர்களை சந்தித்தார். அப்போது "இது என்னுடைய மகிழ்ச்சியான இடம் விண்வெளியில் இருப்பதை நான் மிகவும் விரும்புகிறேன். 8 நாட்களில் பூமிக்கு திரும்பிய உடன் சில திட்டங்கள் வைத்திருந்தார். என்னுடைய தாயார் உடன் நேரம் செலவிடவேண்டும் போன்ற திட்டங்கள் இருந்தது. குளிர்காலத்திற்கான திட்டங்கள் இருந்தது. ஆனால், எல்லாமே தற்போது விண்வெளி நிலையத்தில் தான் அதற்காக நாங்கள் தயாராகி விட்டோம்.

# திருச்சியில் விசேஷித்த ஜெபக்கூட்டம்

அக்டோபர் 12
சனிக்கிழமை
(அரசு விடுமுறை)

இடம் : அன்பரின் ஊழிய ஜெபமையம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

**தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்**

உங்களில் அநேகர் எங்கள் ஊழியங்களை இத்தனை வருடங்கள் நேசித்து ஜெபித்து பலவிதங்களில் உதவி செய்து இருக்கிறீர்கள். ஆனால் அடிக்கடி உங்களுக்கு விடுமுறை இல்லாதபடியால் நாங்கள் நடத்தும் கடைசி சனிக்கிழமை கூட்டத்திற்கு உங்களால் வர இயலவில்லை. உங்களுக்காகவே விசேஷித்த திருவசன தியானமும், ஆவிக்குரிய ஆலோசனை மற்றும் ஆசீர்வாத ஜெபங்களும் மேற்கண்ட கூட்டத்தில் நடைபெறும். தயவுசெய்து இந்நாள் கூட்டத்தில் கலந்து கொள்ளுங்கள். உங்களுக்காக அன்பரின் ஊழிய குடும்பத்தினர் காத்திருப்போம். முடிவில் உங்கள் அனைவருக்கும் உணவு வழங்கப்படும்.

**தொடர்புக்கு : செல் 94888 45627, 0431 - 2741925**



நாசரேத்தில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

(வாலிப பிள்ளைகள், சிறுபிள்ளைகளுக்கு விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.

அக்டோபர் 19 சனிக் கிழமை

இடம் : ஜோதி மாளிகை திருமண மண்டபம் [நாசரேத் கூட்டுறவு வங்கி அருகில்] நாசரேத், தூத்துக்குடி மாவட்டம்.

நேரம் : மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

தேவ செய்தி: Dr. ஆனந்த ஸ்திரா

தொடர்புக்கு : செல் 94888 45627, 0431 - 2741925

திருச்சியில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்

அக்டோபர் 26 சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபமையம் 10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 18.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

தேவ செய்தி : Dr.ஆனந்த ஸ்திரா & குடும்பத்தினர்

தொடர்புக்கு : செல் 94888 45627, 0431 - 2741925

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**
Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**
Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**
Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**
ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org
www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION
புதன்
மதியம் 12.00 – 12.30

வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
ARADANA TV
வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்
HARVEST TV கேரளம்
சனி
இரவு 7.30 – 8.00

## அனுதின அற்புதம்
DAILY MIRACLE



தினமும் காலை 5 மணி

MINISTRY OF JESUS

இந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து
நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக் காணலாம்.

# கர்த்தர் தம் பிள்ளைகளை ஒருநாளும் கைவிடமாட்டார்!

என் பெயர் ரூபல்லா ஜோன்ஸ் மேரி. டெலிவரன்ஸ் திருச்சபையில் உறுப்பினராக இருக்கிறோம். கடந்த 2019–ம் ஆண்டில் என் கணவர் திடீரென வேலையை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு நாங்கள் குடும்பமாக திருச்சிக்கு வந்து குடியேறினோம். அதன்பின் பல இடங்களில் வேலைக்கு முயற்சி செய்தும் வேலை கிடைக்கவில்லை. அதனால் குடும்பத்தில் மனசோர்வு ஏற்பட்டது. நான் வேலைக்கு செல்ல ஆரம்பித்தேன். இருப்பினும் நாங்கள் சோர்வுடன் காணப்பட்டோம். அந்த நேரங்களில் **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்களும், **Dr.ஜேன் ஜாஷ்வா** அவர்களும் எங்களை ஆறுதல்படுத்தி, எங்களுக்காக ஜெபித்து அனுப்புவார்கள்.

2023–ம் ஆண்டின் ஆரம்பத்தில் பாஸ்டர் அவர்கள் மாதத்தின் 3–ம் ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் துதி ஆராதனை நடத்தும்படி என் கணவரிடம் கேட்டுக் கொண்டார்கள். அதன்படி என் கணவரும் சந்தோஷத்தோடு ஒப்புக்கொண்டு கர்த்தருக்காக ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் தேவ பணியை செய்தார்கள். என்ன ஆச்சரியம்! **கடந்த 2023–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கர்த்தர் ஒரு அதிசயத்தை செய்தார். எந்த வேலையை என் கணவர் இழந்து சோர்வுடன் காணப்பட்டாரோ அதே வேலை மீண்டும் கிடைத்து, பணியில் சேருவதற்கு கர்த்தர் கிருபை செய்தார்.** என் கணவருடைய மனதில் எந்த வேலையை இழந்தேனோ அந்த வேலைக்கே மீண்டும் செல்லவேண்டும் என்ற ஆவல் இருந்தது. அந்த ஆவலை கர்த்தர் நிறைவேற்றிக் கொடுத்தார்.

எங்களுடைய துக்கத்தை கர்த்தர் சந்தோஷமாக மாற்றினார். நாங்கள் அவருடைய பிள்ளைகள் என்பதை உணர்த்தும் விதமாக எங்களை கைவிடாமல், வேலை இல்லாத காலங்களில்கூட கர்த்தர் எங்களை ஆச்சரியமாய் போஷித்தார், பாதுகாத்தார், தேவைகளை சந்தித்தார். இழந்த வேலையைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். ஆகவே கர்த்தரை மனதார துதிக்கிறேன். ஸ்தோத்தரிக்கிறேன். எங்களுக்காக ஜெபித்த பாஸ்டர் மற்றும் குடும்பத்தினருக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம். இன்று வரை என் கணவர் தொடர்ந்து மாதந்தோறும் ஒரு ஞாயிற்றுக்கிழமை துதி ஆராதனையை தவறாமல் நடத்தி வருகிறார்கள். அது எங்கள் குடும்பத்திற்கு மிகுந்த ஆசீர்வாதமாய் இருக்கிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



**திருமதி. ரூபல்லா ஜோன்ஸ் மேரி,**
**அதவத்தூர், திருச்சி.**

joshua@mojindia.org


# விடுதலையின்
## ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும் காலை 9.30 மணி - 11.30 மணி**

அபிஷேகம் நிறைந்த பாடல்கள் | அனல் மூட்டும் தேவ செய்தி | உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்

ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில் பங்குபெற
அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்

10-வது குறுக்கு தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லை நகர், திருச்சி-620018.

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

## சென்னையில்

# அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

அக்டோபர் **2** புதன் கிழமை (அரசு விடுமுறை)

இடம் : **BKN Skidmore Hall,**
ரித்தர்டன் ரோடு, வெப்பேரி,
சென்னை.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை



தேவ செய்தியாளர்கள்

**Dr. ஆனந்த ஸ்திரா**

**Mrs. மார்கிரேட் ஸ்திரா**

(கூட்ட முடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்)

தொடர்புக்கு : செல் 94888 45627

## நாகர்கோவிலில்

# குடும்பங்களுக்கான ஆலோசனைக்கூட்டம் மற்றும் தனிஜெபம்

நாள்
அக்டோபர் **11**
வெள்ளிக்கிழமை
(அரசு விடுமுறை)

இடம்: SGS டிலைட் ஹால்,
பெதஸ்தா காம்ப்ளக்ஸ் மற்றும்
விஜயதா ஹோட்டல் அருகில்,
WCC ரோடு, நாகர்கோவில்

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை

**தேவ செய்தி Dr. ஆனந்த ஸ்திரா**

(கூட்ட முடிவில் தனி ஜெபம் ஏறெடுக்கப்படும்)

தொடர்புக்கு : செல் 94888 45627 & 82203 17472

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,